ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

திராவிடநாடு

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 || காஞ்சிபுரம் 7—5—44 || இதழ் 9.

ரஷ்யாவில் முதியோர்கள்.

ஈரோடு மணி மொழியார்.

வயதானமக்களுக்கு இன்று ரஷ்யாவில்இருந்துவரும் சௌகரியங்கள் உலகில் எங்கும் இல்லை. வயதானவர்களைப் பற்றிய பொறுப்புஎல்லாம் சோவியத் யூனியனைச்சேர்ந்ததாகும். ஒரு ஆண் 25 வருஷத்திற்குக் குறையாமல் வேலைசெய்திருந்தால், 60 வயதடைந்திருந்தால் போதும் அவர் சர்க்கார் பென்ஷன் பெற தகுதியுடையவராகிவிடுகிறார். ஒரு பெண் 20 வருஷத்திற்குக் குறையாமல் வேலைசெய்திருந்தால், 55 வயதடைந்திருந்தால்போதும் அவரும் சர்க்கார் பென்ஷன்பெறத் தகுதியடையவராகிவிடுகிறார். பென்ஷன் அளிப்பதில் ஒருவர் செய்தவேலையையோ அவர் சம்பாதித்து வந்த சம்பாதனையையோ கவனிப்பதில்லை. ஆனால் ஒவ்வொருவரும் கண்டிப்பாக குறிப்பிட்டவருஷம்வரைவேலைசெய்தால் தான் பென்ஷன்பெற லாயக்குள்ளவர்கள் என்ற விதியும்இல்லை. வேலைசெய்ய சக்தியற்ற நிலைமையில் ஒருவர் இருந்துவிட்டால்அவரும் பென்ஷன்பெற லாயக்குள்ளவராகிவிடுகிறார். ஒருவர் வேலை செய்தகாலையில்ஏற்பட்ட விபத்தினாலோ அல்லது அதன் காரணமாக ஏற்பட்ட நோயினாலோ அசக்தராய்விட்டால், அவர் எத்தனை வருடம் வேலைசெய்திருந்தாலும் அதைக்குறித்தும் கவலைகொள்ளாமல், அவருக்குப் பென்ஷன்அளிக்கப்படுகிறது.

சுரங்கங்களிலோ அல்லது அபாயகரமான தொழில்களிலோ ஈடுபட்டிருப்பவர்களுக்கு அவர்களுடைய சம்பளத்தில் 60 சதவிகிதம் பென்ஷன் அளிக்கப்படுகிறது. கடினமான தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு 55 சதவிகிதமும் இலேசான தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு 50 சதவிகிதமும் பென்ஷன் அளிக்கப்படுகிறது. இதுபோலவே, ஒருவர் எவ்வளவுகாலம் வேலைசெய்திருக்கிறாரோ அதற்குத் தகுந்தமாதிரி பென்ஷன் விகிதமும் உயர்ந்துவருகிறது.

விஞ்ஞானத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உயர்ந்த பென்ஷன் அளிக்கப்படுகிறது.

விஞ்ஞானக்கல்வி நிலையத்தில் 25 வருடத்திற்குக் குறையாதுவேலைசெய்த விஞ்ஞானிகளில் 10 பேருக்கு அவர்கள் கடைசியாக என்ன சம்பளம் வாங்கிவந்தார்களோ அந்த அளவுக்குச் சமமான பென்ஷனை அளிக்கப்பட்டுவருகிறது.

ஆசிரியர்கள் கல்விநிலையங்களில் வேலைசெய்யும் இதரர்கள், டாக்டர்கள், மிருகவைத்தியர்கள்போன்றோர்கள் 25 வருடங்களுக்குக் குறையாது வேலைசெய்தவர்களுக்கு அவர்கள் சம்பாதனையில் 50 சதவிகிதம் பென்ஷன் அளிக்கப்படுகிறது.

சோவியத் சர்க்கார் நிர்மாணிக்கப்பட்டவுடனே வயதானவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதுபற்றி ஆலோசிக்கலானார்கள். இதற்காகச்சர்க்காரே முதியோர் இன்சூயரன்ஸ் என்ற திட்டத்தை ஆரம்பித்து அதை நடத்திவரலானார்கள். முதல் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் இதுசம்பந்தமான காரியங்கள் கவனிக்கப்பட்டு அபிவிருத்திசெய்யப்பட்டது. 1938-ம் வருஷத்தில்சோவியத் ரஷ்யாவில் சமுதாய சம்பந்தமான காரியங்களுக்காக 300 கோடி ரூபிள்ஸ் (சோவியத் நாணயங்களின் பெயர்) வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டது.

முதியோர்களுக்கும் வேலைசெய்ய சக்தியற்றவர்களுக்கும் பென்ஷன்கொடுத்துவிடுவதினாலே தங்கள் கடமை முடிந்துவிட்டதாகச் சோவியத்சர்க்கார் கருதவில்லை. பென்ஷனர்களுக்கு உதவிசெய்ய பல இனங்களிலும் ஏராளமான பணத்தைச் செலவுசெய்து வருகின்றனர். சுகாதாரவசதிகள், வைத்திய வசதிகள் முதலியவைகள் செய்து வருகின்றனர்.

முன்னர் இராச குடும்பத்தினருக்கும் பிரபுக்கள் குடும்பத்தினருக்கும் சொந்தமாயிருந்த மாளிகைகள் இப்பொழுது பென்ஷனர்களுக்குக் குடியிருக்கும் இல்லங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன.

லெனின் கிராடுக்குப்பக்கத்தில் ஸார்ஸ் கோயசேலோவில் கோச்பீ இளவரசனால் கட்டப்பட்ட பெரிய மாளிகை முதியோருக்கு நர்ஸிங் விடுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோல் பழைய மாளிகைகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

வேலைசெய்ய இயலாதவர்கள் வசிக்கும் விடுதிகளைச் சேர்ந்தாப்போல் தேனீ வளர்த்தல், கோழி வளர்த்தல், பயிரிடுதல் போன்ற அலுவல்களும் நடந்து வருகின்றன. ஆனால் இவையாவும் அவரவர்கள் தாங்களாக விரும்பி செய்யப்படுவதேயல்லாமல் கட்டாயத்தின் மீது செய்யப்படுவதல்ல.

எல்லா விடுதிகளிலும் படிக்கவும் பொழுது போக்கவும் வேண்டிய சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. படிக்கப் பத்திரிகைகள் உண்டு. கண்டுகளிக்க படக்காட்சிகள், நாடகக் காட்சிகள் உண்டு.

இவர்களுக்காக எண்ணற்ற ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. நல்ல சீதோஷ்ண வசதியுள்ள இடங்களில் இவர்களுக்கென சானடோரியங்கள் இருக்கின்றன. சோவியத் சர்க்கார், கூட்டுறவு முறையில் ஒரு விசேஷ அமைப்பு ஏற்படுத்தியிருக்கின்றனர். இதில் முதியோர்களோ அரைகுறையாக "வேலைசெய்ய முடியாதவர்களோ" எளிதாக ஏதாவது வேலைசெய்து தங்கள் பொழுதைப்போக்கலாம். இந்தமுறையில் தற்போது 2 லட்சம் பேர் வேலைசெய்து வருகின்றனர். இவர்கள் 1938ல் மட்டும் 300 கோடி ரூபிள்பெருமான பொருள்களை உற்பத்திசெய்திருக்கின்றனர்.

இதில் வேலை செய்பவர்களின் சராசரி மாதவருமானம் 300 ரூபிள்ஸ். பலர் மாதம் 400 முதல் 500 ரூபிள்ஸ்வரை சம்பாதிக்கின்றனர்.

இத்தகைய கூட்டுறவு முறையில் வேலை செய்துவருகிறவர்கள், சர்க்காரிடமிருந்து தாங்கள் பெரும் உதவியை மிச்சப்படுத்தி வைக்க இன்சூயரன்ஸ் சொசைடி வைத்து நிறுவிவருகிறார்கள்.

1938ல் இந்த சொசைடிகள் தங்களுடைய மெம்பர்களுக்காக 580 லட்சம்

(8ம்பக்கம் பார்க்க)

இவன் கள்ளனா?

இரண்டுவெங்காயம்,
கொஞ்சம் உப்பு,
ஒரு பிஸ்கட்துண்டு!

அவன் களவாடியபொருள் இவையே! பல்லைக்காட்டினால் என்ன, பரிதாபத்தைத் துணைக்குஇழுத்தால் என்ன, களவாடினது குற்றம் குற்றந்தானே! எனவே இந்தக் கள்ளனைப் போலீசார், கோர்ட்டுக்குஇழுத்தனர்-சட்டத்தின்மூலம் குட்ட. முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட் தோழர் குன்னிராமன் நாயர், இந்தக் கள்ளனின்நிலைமையைக்கண்டார். இவன் களவாடியபொருளோ இரண்டு காசுக்கு மேல்பொறாது, இதற்கு ஒரு வழக்கா! கொஞ்சம்கண்டித்து அவனை விட்டு விட்டிருக்கலாம்—என்று கூறி, அவனை மன்னித்து விரட்டிவிட்டார். பலபலவருஷங்களுக்கு முன்புஅல்ல, பத்து நாட்களுக்கு முன்பு சென்னையிலே நடைபெற்ற சம்பவம்இரண்டுவெங்காயம்ஒருபிஸ்கட்துண்டு கொஞ்சம்உப்பு, ஆகியவற்றைக் களவாடியவன், ஒரு கூலி, வயது 19, பெயர் நடேசன். ஏன் திருடினாய்? என்ற கேள்விக்கு அவன் சொன்ன பதில் என்ன தெரியுமோ? பசி!

பசி! அவனை இவ்வளவு அல்பமான களவைச்செய்யவைத்தது! செல்வவான் வீட்டு நாய்க்குட்டிகூடச் சீந்தாது, அந்த வாலிபன் திருடிய, பொருளை. எத்தனையோ மாளிகைகளிலே குப்பைமேட்டிலே, கிடைக்கும்இதைவிட அதிகமான பொருள். அவனுடையபசியின்கொடுமை அவனைக், கள்ளனாக்கிற்று, தங்கமோ வைரமோ திருடிக்கொண்டு, பிறகு தர்பார்வாழ்வு நடத்தஅல்ல, பசி! பசி! அதற்குக்கொஞ்சம் உணவுதேடினான், களவாடினான். மாஜிஸ்ட்ரேட் அந்தப் பரிதாபத்துக்குரியவனை மன்னித்து விட்டார். ஆனால், இப்படிப்பட்ட இழிதொழில்புரிந்தேனும் ஜாண் வயற்றைக் கழுவவழிகாண்போம்என்ற நினைப்பிலே, மக்களை உலவவிடும், சமூகத்தை, அறிவாளிகள் மன்னிக்கலாமா? எவ்வளவு கொடுமைஎன்பதை நினைத்தாலே நெஞ்சம் பதறவில்லையா! 1941—42 எனும் ஓராண்டிலேமட்டும் இந்தியாவிலே, வருமானம் 4250 கோடி ரூபாய் என்றோர் கணக்கு இருக்கிறது. பம்பாய் தீவிபத்திலே, பாழான தானியத்தின் மதிப்பு 60 கோடி ரூபாயாம். வடநாட்டிலே, நடந்தேறியயாகங்களின் செலவுமட்டும் பல இலட்சங்கள், இவ்வளவுக்குப் பணம் நடமாடுகிறது, நடேசன் என்பவன், தன் பசியைப் போக்கிக்கொள்ள வெங்காயத்தைத் திருடநேரிட்டது.

நடேசனைத் தள்ளுங்கள், நளினிகளின் கதையைக்கேளுங்கள், நாம் வாழுகிறோமே இது நாகரீகமான வாழ்வுதானா, நாமெல்லாம் மனிதர்கள்தானா என்ற சந்தேகங்கூடத்தோன்றும் நமக்கு!

வங்காளத்திலே போலீசார் பல விபசார விடுதிகளைச் சின்னாட்களுக்கு முன்பு, சோதனையிட்டனர். பல பெண்களை விபசார விடுதிகளிலிருந்து வெளியேற்றி, அனாதை ஆஸ்ரமங்களுக்கும், ரட்சணிய சங்கங்களுக்கும் அனுப்பிவைத்தனராம். இந்த நளினிகள், பரம்பரையாகக், காமக்குரோதாதிகளிலே மூழ்கிக்கிடந்த கூட்டமல்ல, கட்டழகைக்கண்டுகிட்டே வருவோனிடம் விட்டில் பூச்சியென வீழ்ந்தவர்களுமல்ல! விபசாரம் என்றசொல் கேட்டாலே, திகில்கொள்வர்! அப்படிப்பட்ட பெண்கள், விபசாரவிடுதிக்கு ஏன் சென்றனர்? வங்கத்திலே நேரிட்டதே பயங்கரமான பஞ்சம், அதுபோது, கஞ்சிக்குக்கலவி தரும்பஞ்சைகளாயினர். விபசாரந்தவிர அவர்கள் தப்பவேறுமார்க்கம் கிடைக்கவில்லை, கற்பை இழந்தனர், உயிரைப்பெற்றனர். பசி, நடேசன் என்பவனைக் களவாடவைத்தது; பஞ்சம், பாவையர் பலரை விபசாரிகளாக்கிற்று. எப்படிப்பட்டகாலத்திலே? பணப்பெருக்கமிருந்தகாலத்திலே! எந்த நாட்டிலே? தர்மத்துக்கும் சத்தியத்துக்கும் அன்புக்கும் அருளுக்கும், ஞானத்துக்கும்,தனக்கு நிகரில்லைஎன்று பெயர்பெற்ற புண்யபூமியிலே!! சேற்றிலே புழுநெளிவதும், புண்ணிலே சீழ் வடிவதும்போல, தீராத வறுமையால், கேட்டால்கிடுக்கிடக்கூடிய செயலைப்புரிந்தேனும், பிழைத்தால்போதும் என்று எண்ணுபவர், கிளம்புகின்றனர். அவர்களை விசாரித்துத் தண்டனை தரவழக்குமன்றங்கள்உள்ளன. இத்தகைய குற்றத்திற்குத் தண்டனை இப்படி, என்று வரையறுக்கச்சட்டம் இருக்கிறது,அதனை விளக்க, வாதிட, நீதியைத்தமது நாவன்மையிலே பொருத்திக்காட்டும் வழக்கறிஞர்கள் உள்ளனர்! ஆனால் எச்சில் இலையிலே நாயுடன் நாயாகப்பாயும் பஞ்சைகளை பசியைப் போக்கிக்கொள்ளப் பழஞ்சாதம் திருடும் பரிதாபத்துக் குரியவர்களை, வயற்றைக் கழுவ விபசாரந் தவிர வேறு வழிகிடைக்கப் பெறாமல் வழுக்கிவிழும் வனிதையர்களைநாட்டிலே பெருக்கிக்கொண்டே போகும் சமூகம் இருக்கிறதே, அதனைஎந்த வழக்கு மன்றம் விசாரணை செய்கிறது? இந்த மோசமான நிலைமையைத்திருத்தி அமைக்க ஒரு சட்டம் உண்டா? இருப்பது கெடாமல் பார்த்துக்கொள்ள, சொத்துரிமையை எவரும் தாக்காது பாதுகாப்பு தேடிக்கொள்ள, திருடாதே தண்டனைதரப்படும் என்று எச்சரிக்கைச் செய்ய, விபசாரம் புரியாதே அதுசட்ட விரோதம் என்று போதனைபுரிய, களவும், காமமும்பஞ்சமாபாதகங்களைச் சார்ந்ததாகும், அத்தகைய பாபிகளை, நரகலோகத்திலே, நெருப்புக் குழியிலேதள்ளி வதைப்பார்கள் என்று மிரட்ட, ஏடுகள் ஏராளம் நாட்டிலே! ஆனால், தம்மோடு பிறந்த சிலர், இத்தகையதகாத செயல்புரிய வேண்டிய நிர்ப்பந்தத்திற்குக்காரணம், என்ன? தன்னலக்காரர் தனவானாகி, ஏமாளி ஏழையாகிவிட, செல்வவானின் பணப்பெட்டியைப் பாதுகாப்பது தவிர வேறுபணி புரியாத சட்டதிட்டங்கள் உள்ளனவே, இவைமாறி, தனியொருவனுக்கு உணவு இல்லை என்று கூறும் சமுகம் இருப்பது, பொதுவாக மக்களின் மனம், காட்டுமிராண்டித் தனத்திலிருப்பதைக் காட்டுகிறது. இதனை மாற்றுமுன்னம் உலகம் அறிவின் இருப்பிடம் என்று கூறமுடியாது என்ற சட்டமொன்று ஏற்பட வேண்டாமா?

புதியஉலகம், புதியஅமைப்பு என்றெல்லாம் பேசப்படுகிறது. பசி! என்ற கொடுமையை, மக்களிடமிருந்து விரட்டுவதைத், தனது முதல்கடமையாகக் கொள்ளும் சர்க்கார் எங்கும் அமைக்கப்பட்டாலொழிய, புதிய உலகம் என்ற பெயரோ, புதிய அமைப்பு என்ற பட்டமோ, வேறு திட்டங்கட்குப்பொருந்தாது. மானத்தை விற்று உயிர்வாழவேண்டிய நிலைமையில் மக்களை விட்டுவைக்கும் கோரம் ஒழிக்கப்பட்டாக வேண்டும். பசிக்கு உதவாது, பதுங்கிக்கொண்டிருக்கும் பண்டம், தாரித்திரத்தைத் துடைக்காது சனுக்குச்சுந்தரிகளுக்கோ தர்பார் சுந்தரருக்கோ நாளிடும் பணம், பொருளாதாரஏற்றத்தாழ்வுகளை நிரந்தரப்படும் தொழில் அமைப்பு ஆகியவை, கொலைகளவு, காமக்கூத்து என்பன போன்றவைகளை வளர்க்கின்றன என்ற உணர்வும், இதனைத்திருத்தி அமைக்கவேண்டுமென்ற அறிவும், பிறக்க வேண்டும். அப்போதுதான் வெங்காயம் திருடும் கூலியும் விலைமாதாகும் நளினியும், இல்லாது போவர். அந்நிலைமை நீடிக்கும்வரை, இத்தகைய இழிதொழில் புரிவோர் இருக்கத்தான் செய்வர். அவர்களை விசாரணை செய்து தண்டிப்பதைவிட, முக்யமாகச் செய்யவேண்டிய விசாரணை, சமுதாய நிலைமையை, பொருளாதார அமைப்பு முறையை!!

பிறப்பு.

பம்பாய் தெ. இ. ஆ. தி. வாலிபர் கழகத்தின் அமைப்பாளரும், பெரியார் E. V. R. வரவேற்புக்கமிட்டி, காரியதரிசியும், சிறந்த பொதுநலத்தொண்டருமான, தோழர் V. S. T. ராஜா, அவர்களின், சமீபத்தில் பிறந்த பெண்மகவுக்கு "பரமானந்தவடிவு", எனப் பெயரிடப்பட்டு, "திராவிட நாடு", பத்திரிகைக்கு ரூபாய் ஒன்று நன்கொடை வழங்கப்பட்டது.

நமப்பார்வதிபதயே...!

[பரதன்.]

நீற்றுக்கவசமேன்?
நீண்ட ருத்ராக்ஷமேன்?
நீரில் மூழ்குவதேன்?
நின்று ஜெபிப்பதேன்?
போற்றிப் புனைவதேன்?
பூப்பறித்திடுவதேன்?
பொய்ரெய்யுங் கேட்டுக்குப்
பூசிடப்போவதேன்?

என் இந்த வெளிவேடங்கள்? உள்ளமோ கள்ளர் குகை! செயலோ செந்நாய்! நெற்றியிலேயோ நீறு, கையிலோ ஜெபமாலை, கழுத்திலேயோ ருத்ராக்ஷமாலை, கட்கத்திலோ திகண்டு, நாவிலேலோ நால்வர், ஏன் இந்த நாடகம் என்றுகேட்கிறார், ஒரு பெரியார். சு.ம. அல்ல, பழமைக்கும் பக்திக்கும் ஓரளவு கட்டுப்பட்டவர்தான், என்றாலும் அவராலேயே சகிக்கமுடியவில்லை, இந்த வேடதாரிகளின் போக்கைக் காண! அடடா! என்ன வேடம், ஏன் இத்தனை கபடம், என்ன பயன் இத்தகைய சடங்குகளால், என்று எண்ணுகிறார், ஏங்குகிறார், அந்த ஏக்கத்திலிருந்து எழுகிறது கேள்விகள், நீறு பூசுகிறாயே ஏன்? நீண்ட ருத்ராட்சம் ஏன்? என்று, கேட்கிறார் ஒன்றன்பின் ஒன்றாக, மடமடவென. நீகெட்ட கேட்டுக்கு இதுவேண்டுமா? என்றுசாடுகிறார். அதுமட்டுமா,

"முக்தியில்லை, ஒருசித்தியில்லை,
அருட்சத்தியில்லை, என்னிருந்துமில்லை"

என்று, கூறுகிறார். நீ வேடமிடுகிறாயே வீணனே, என்னபலன் காணப்போகிறாய்? பொய்வேடமிடும் உனக்கு எதுவும் கிட்டாது, முக்தியில்லை, அருட்சக்தியில்லை என்று கூறுகிறார். ஏன், இவ்வண்ணம் உரைக்கிறார்?

பக்திசெய்து என்ன, சத்தியம்இல்லையாகில் என்ற கேள்விக்குப் பிறகே இவ்வளவும் கூறுகிறார். பேசுவது பொய், பூசுவது நீறா? அண்டப்புளுகுக்கு நீண்ட ருத்ராட்சமா? சத்யம் இல்லையே, எதற்கு வேடம்? என்று கேட்கிறார், இசைச்செல்வர் தோழர், இலட்சுமணபிள்ளை அவர்கள். இவர் சு.ம. அல்ல! சுடுசொல் உரைத்திடும் பேர்வழியல்ல. சைவச்சீலர்களைக் கண்டால் சீறுபவரல்ல! இப்படிப்பட்டவராலேயே பொறுக்கமுடியவில்லை, மதவேடதாரிகளின் நிலையைக் கண்டு. பகுத்தறிவாளருக்கு, கோபம் அதிகமாகத்தானே இருக்கும்.

பொதுவாகவே, புராணம் படித்திடுபவருக்கு, இத்தகைய வேடங்கள் இருப்பது யாவருமறிந்ததே. வீரனுக்குவாள், இருப்பதுபோல, புராணிகருக்குப்பூச்சும் வேடமும் தேவையாகஇருக்கிறது என்று கூறினாலும் சரியே, குருடனுக்குக் கோல் தேவையாக இருப்பதுபோலப், புராணிகனுக்கு இத்தகைய வேடம் தேவையாக இருக்கிறது என்று உரைத்தாலும் சரியே. வேடமிடாத புராணிகன், மோடிசெய்யா மாது, ஜோடியில்லா மாடப்புறா, சேடியில்லா ராஜகுமாரி இருப்பதில்லை. இவர்களின் வேடம், காசுதிரட்ட உதவுகிறது, கண்ணியத்தை முன்புபெற முடிந்தது, இன்று காலவேகம், இதனைத்தட்டிப் பறிக்கிறது. இன்றும் உண்டு, தெளிவில்லாதாரின் திருக்கூட்டத்திலே, இப்புராணிகர்களுக்கு நெய்யும் பாலும் தரும் பக்தர்கள், சில இடங்களில், பட்டும் பீதாம்பரமும், பணிஅணிமணியும்கிடைக்கிறது. ஆனால், ஓரளவு பகுத்தறிவுவளர்ந்ததும், அடடா! இந்தப் புராணிகர்கள் ஏன் இப்படிப் புளுகிப் பிழைக்கிறார்கள், என்று பரிதாபந்தானே தோன்றுகிறது. பொருள் விரும்பி நாவால் பொய்மொழிவாரிடம், பகுத்தறிவு உலகுக்கு மதிப்பு ஏற்படுமா? எனவே காலவேகம் அதிகமாகவாக, காசு குறைகிறதோஇல்லையோ புராணப்புளுகரின் கண்ணியம் கரைந்தே தீரும். காலவேகத்தைக் கவனிக்க மறுத்து, காதினிலே குண்டலமாட, கனத்த சரீரம்பாட, காய்ச்சியபால் தொண்டையிலே ஓட, கண்களோ கதியற்ற காரிகையரைத்தேடத் தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்பவர்கள் பிறகு மிகமிக அல்லற்பட நேரிடும் என்று அறிவுறுத்துகிறேன். இதுநாள் வரை பொய்யுரைத்துப் பூச்சுடன் நின்று, பாமரரை ஏய்த்தது போதும், இனி மெய்யுரைத்தே மெய்வளர்ப்போம்என்ற மேலானகொள்கைக்கு இவர்கள் வரவேண்டும், எவ்வளவு பொய்! எத்தனை அண்டப்புளுகு! அறிவுக்குப் பொருத்தமா, ஆராய்ச்சியின் பாற்பட்டதா, கலைக்கு உதவுமா, கருத்தைத் துலக்குமா, இவர்கள் பேசிடும் புராணங்கள்! ஒரு புராணத்துக்காவது, அறிவின்பாற்பட்டபொருள்உரைக்க முடியுமா? உரைத்தனரா? உரைப்பரா? தமது கயமையை மறைப்பர், காய்ச்சலுடன் சிரம் அசைப்பர், சபிப்பர், இவ்வளவேயன்றி, காரண காரியவிளக்க மாற்றுவரோ, இந்த எடுதாங்கிகள். நாவாணிபம் இனி நடவாது, நாடு இனி இதைத் தாங்காது, கேடுசூழ்ந்ததுபோதும், பாடுபடுபவனைப் பாடுபடாதவன் அடிமை கொள்ளும் பாதகத்தைத் துடைத்தாக வேண்டும் என்ற பண்புபலம்பெற்றுவரும் இந்நாளிலே, பார்வதிலோலன் பள்ளியறையிலே இருந்திடும்காட்சியைப்பாடிக் காட்டுவது, பயன்தருமா? இதைவிடச் சமூகத்துரோகம் வேறு உண்டா? தந்தையின் உயிர்பிரியும் நேரம், தாயின் கதறல் நெஞ்சைப் பிளக்கும் சமயம், உற்றார்உறவினர் ஓலமிடும் வேளை, அந்த நேரத்திலே, பூந்தோட்டத்திலே புன்னாகவராளி பாடிக்கொண்டு புதல்வன் இருப்பானானால், அவனது இசையே இழுக்காகுமன்றோ, எவரேனும் அவனை எடா, மூடா! போதும் உன் சங்கீதம், உள்ளே சென்றுபார் உன்னைப்பெற்றவன் உயிர் வாதை அடைவதை என்றுரைக்காதிருப்பரோ? அதுபோலவே, நாடுநலிகிறது, மக்கள் வதைகின்றனர், மதி மங்கிக்கிடக்கிறது, வறுமைதலைவிரித்தாடுகிறது, இந்த வேளையிலே, திருப்புகழ் அமிர்தமாம், தேவாரபாராயணமாம், கம்பர்கவி இன்பமாம், புராணப்பஞ்சாமிருதமாம், ஏன் இந்தப்போக்கு என்றுகேட்டால், கேட்பவனின் நாக்கை அறுக்கமாட்டாயா, நமச்சிவா! என்று கசிந்து கண்ணீர் மல்கினால்போதுமா? செந்தமிழ் கற்றவராம், செய்யுளின் வளம் தெரிந்தவராம், கந்தனின் அடிமையாம், கபாலியின் சீடராம், கிருபானந்தவாரியாம், ஒருபுராணப் பிரசங்கியார். அவருடைய சொற்பொழிவு சுவையாம், புராண அறிவு ஆழமாம், பேச்சோ வேகமாம், மேற்கோள் அபாரமாம் வருவாயும் வளமாம். அவருடைய 'வேலை' இந்தவேளைக்கு ஏற்றதா, என்பதே கேள்வி. அவர் ஆறுமுகனின் திருவருள் பெற்றவராக இருக்கட்டும், முத்தமிழ்கற்றவராக இருக்கட்டும், அவருடையப் பேச்சுத்திறனும், வேலையின் பயனும்,' மக்கள், இன்றுபடும் வேதனையைத் துடைக்க, வறுமையை நீக்கப், பேதத்தைப்போக்க, புல்லரைச்சாய்க்க, மடைமையைமாய்க்க, இம்மி அளவாவது பயன்படுகிறதாஎன்று கேட்கிறேன். விண்ணிலே விமானம்பறக்கும் நாளிலே, கண்ணிலே காணுமலேயே ரிடபவாகனரூடராக எம்மான், பெம்மான், கச்சி ஏகம்பன், காமாட்சிமணாளன், வந்தார், உடனே தேவதுந்துபி முழங்கிற்று, தேவர்கள் பூமாரிபொழிந்தனர், என்று புராணம் படிப்பது, சரியா, அழகா, தகுமா, முறையா, அறிவுவளர்ச்சிக்கு உகந்ததுதானா? சத்கதாகாலட்சேபம் என்ற பெயரால், சத்தற்ற விஷயங்களை, அண்டப்புளுகுகளை மக்களிடம் பரப்புவது, காலக் கொலை, கருத்துக் கொலையல்லவா? இத்தகைய கொலைத் தொழில்புரிவது அடுக்குமா என்று கேட்கிறேன். புராணம் படிக்கிறீர்களே, இந்த பூசுர ஏஜண்டுகள், பகுத்தறிவாளரின் சந்தேகங்கட்குப் பதில்கூறும் பக்குவமோ பண்போ பெற்றுள்ளனரா. கேள்விக்குப் பதில்இல்லை-கூறமுடியாது. தனியே வருக-தயவுசெய்க-என்ற தழதழத்த குரலிலேயே காரியத்தை நடத்திக்கொண்டு போகின்றனரேயன்றி, வெட்டு ஒன்று துண்டு இரண்டென விடைபகருகின்றனரா? நெட்டுருப்போட்டதைக் கொட்டிவிட்டுக் கைதட்டுவோரைக் கண்டு காசு தட்டிக்கொண்டு போவதன்றி, வேறு

(4-பக்கம் பார்க்க.)

அடுத்த இதழில்.

தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள் தமது குமாரியின் திருமணத்தின்போது ஆற்றிய சொற்பொழிவும், மே. த. கவர்னர், ஜட்ஜி சௌந்தரி ஆகியோரின் வாழ்த்துரைகளும் வெளிவரும்.

திராவிட நாடு

காஞ்சி 7—5—44 ஞாயிறு

பாஞ்சால சபதம்!

“அவிழ்ந்த கூந்தலைக், கோதவும் மாட்டேன், அக்ரமம் புரிந்தவனின் தலை அறுபட்டாலொழிய” என்று சபதமிட்டாளாம் பாஞ்சாலி, புராணிகர் கூற்றுப்படி. ஐவருக்குப் பத்தினியாக இருந்த அம்மைக்கே: பிறனொருவன் அரசஅவையிலே செய்த மானக்குறைவு, மனஎரிச்சலை உண்டாக்கிற்று. மற்றவர்நிலையைக்கூற வேண்டுமா! பாஞ்சாலியின் சபதம் என்பது, பழைய புளுகு. இதுபோது பாஞ்சால சபதம் எனும் உண்மைநிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. பாஞ்சாலத்திலே ஜெனரல் டயர் எனும் ஆங்கிலேயன் துப்பாக்கியில் குண்டுதீரும் வரை சுட்டுக்கொன்றான் மக்களை என்றுபேசி, மக்களிடம் ஓட்டுப் பறித்த பிறகு, பாஞ்சாலக் கொடுமையை காங்கிரசார் மறந்தனர், வெள்ளையருடன் குலாவல்புரிவோராயினர். அது போன்று இன்று நடைபெறும் சம்பவமும், மறந்துவிடப்போவது என்று நாம் கருதவில்லை. பத்துக்கோடி முஸ்லீம்களின் மனதைப் புண்ணாக்கும் செயல் நடந்திருக்கிறது. நாம் குறிப்பிடுவது, சர். சிகந்தர் ஹயத்கானின் திருமகன், பஞ்சாப் மந்திரி சர்தார் ஷௌகத் ஹயத்கான், பாஞ்சால மாகாணக்கவர்னரால், வேலையினின்றும் நீக்கப்பட்டார்-டிஸ்மிஸ் செய்யப்பட்டார். அம்மை ஒருவரை, சர்தார் ஹயத்கான் வேலையினின்றும் நீக்கினாராம், இந்த “அநீதி” யைக்கண்ட, மே.த. கவர்னர் அவர்கள், மந்திரியை வேலையை விட்டுநீக்கிவிட்டாராம்! கன்றைக்கொன்ற மகனைத் தேர்க்காலிலே போட்டுக் கொன்ற, மனுநீதிகண்டசோழன், போற்றித் திருவந்தாதிபாடக் கல்லறையினின்றும் எழுந்து வருவார், இந்த நீதியை நிலைநாட்டிய கவர்னர் பிரானைக்கண்டு! என்ன துலாக்கோல், கவர்னரிடமிருப்பது! வேலையிலிருந்து ஒரு அம்மையார் நீக்கப்பட்டார் என்றால், அது அநீதியென்று ஏற்பட்டால், வழக்கு மன்றத்திலே அவ்வம்மை, நின்றுபேசலாம், நீதிகோரலாம். ஆனால் அம்மையின் துயர் அறிந்ததாலோ, அன்றி நாமிருக்க இந்த நீதிகேடு நடைபெறுவதா என்ற அறக்கோபத்தால் உந்தப்பட்டோ, யாதோ நாமறிகிலோம், கவர்னர், மந்திரியாரை வேலையினின்றும் நீக்கிவிட்டார். இதுகேட்ட, முதல்மந்திரியாரும் மற்றமந்திரிமாரும், உடனிருந்தவருக்கு உற்றதுணை என்று யாதுசெயல்முறை! தாமும் ராஜிநாமாச் செய்திருத்தல் வேண்டும். என்ன செய்தனர்? இன்றும் மந்திரிகளாகவேஇருக்கின்றனர்! ஏன்? பதவியிலேஒரு பசை இருக்கிறது, அதுபலதேவர் என்று பெயர் இருப்பினும் வீரசிங்கம் என்ற விருது இருப்பினும், அமர்ந்தவரைஅழுந்திப் பிடித்துக்கொள்கிறது! சர்தார்ஹயத்கானின் தந்தை, நேசநாட்டினருக்கு ஆற்றியதொண்டு அபாரம். செய்நன்றி மறக்கலாமா? என்று வாதிட்டு, சர்தார் ஹயத்கான், பதவியிலிருக்க வேண்டுமென்று நாம் விழையவில்லை, அவரும் விரும்பார், அவர் அனுஷ்டிக்கும் இஸ்லாம், அந்தப்போக்கை அனுமதிக்காது. எல்லாவற்றையும் விட “இஜத்”—அதாவது சுயமரியாதையே மேலானது என்பது இஸ்லாத்தின் கட்டளை. எனவே அவரோ, ஏனைய முஸ்லீம்களோ, முஸ்லீம் பண்பறிந்த நாமோ, பதவி போயிற்றேஎன்று வருந்தவில்லை, ஆனால், பாஞ்சாலத்திலே நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி, ஏகாதிபத்தியப் போக்கை எப்போதும் கண்டிக்கும் தேசிய வீரர்கள், ஏன் வாய்திறக்கவில்லை என்றே கேட்கிறோம்.

பாஞ்சால வட்டாரத்து லீக் மாநாட்டிலே ஜனாப் ஜின்னா அவர்கள், இந்த “டிஸ்மிஸ்” விஷயமாக நிலைமை தெளிவுபடுத்தப்படவேண்டும், அவசியமானால் லீகை ஆதரிக்கும் மற்ற மந்திரிகளும் ராஜிநாமாச் செய்யவேண்டும் என்று முழக்கமிட்டுள்ளார், அதன் எதிரொலி விரைவிலே உருவாகும் என்று நம்புகிறோம். நிற்க, அங்கு இன்று முதல்மந்திரியாக இருக்கும் கிஜர் ஹயத்கான், இந்து சீக்கியத் தலைவர்கள் சிலரின் தலையாட்டித் தம்பிரானாகி, லீகைப் புறக்கணித்தும் ஜனாப் ஜின்னாவைப்பழித்தும், பாஞ்சாலத்திலே லீகமந்திரிசபைஏற்படாதவாறு தடுத்தும் வருகிறார். பாஞ்சாலத்துப் பிரதமர், வங்கப்பிரதமராக இருந்து வாயினால் வம்பு வளர்த்துக்கொண்ட ஜனாப் பஜ்லுல்ஹக் அவர்களின் இன்றைய நிலையைக் கண்டுகொள்ளவேண்டிய பாடமுண்டு என்று நினைவூட்டுகிறோம். கவர்னரின் செயலும், பிரதமரின் போக்கும் இன்று பாஞ்சால முஸ்லீம்கள் ஒரு “சபதம்” எடுத்துக்கொள்ளும் நிலைமையை உண்டாக்கிவிட்டன. இனி, லீக் மந்திரி **சபையை ஏற்படுத்தியே தீரவேண்டும் என்பதே அந்தச்சபதம்.** பதவியிலிருக்கும் இன்றைய பிரதமர், பழைய பசலிகளைக் கட்டிப்பிடித்துக்கொண்டு காலந்தள்ளலாம். நெடுநாட்களுக்கல்ல-சிலகாலம். தேர்தல் நடத்தினால் தெரிந்துவிடும்பாஞ்சாலத்திலே, பாகிஸ்தான் எனும் பிறப்புரிமைக்காகப்பாடுபடும் லீகுக்குத்தவிர மற்ற எதற்கும் முஸ்லீம்கள் ஆதரவுதரமாட்டார்கள் என்ற உண்மை. ஒரு திங்கள்கூட முடியவில்லை, அன்பர் ஆச்சாரியார், பாஞ்சாலகூட்டு மந்திரிசபையின் நேர்த்தியே நேர்த்தி, அதை அமைத்தவர்களின் கீர்த்தியே கீர்த்தி என்று வியந்துரைத்து. இன்று, அந்த மந்திரிசபையிலே இவ்வளவு அலங்கோலம்!!

நமப்பார்வதி பதையே.

3ம் பக்கத் தொடர்ச்சி.

இவர்கள் கையாளும் முறை ஏதேனும் உண்டோ? தேசியப் போர்வையாளருக்குக் கேள்விகளுக்குப் பதில்கூறமுடியாத நேரத்தில்ஒருஇரைச்சல்உண்டு தப்பித்துக்கொள்ள உங்கட்குத்தெரியும், அது,போலோமகாத்மாகாந்திக்கு ஜே! என்று கூவுவர், கூட்டம் முடிவுபெறும். இதுபோலவே புராணிகர்களின் கூட்டத்திலே கேள்விகள் கிளம்பினால், சைவப் பெரியார்கள் நமப்பார்வதிபதயேயை நம்பிக்கொண்டிருக்கின்றனர், தமது கடையைக்கட்டிக்கொள்ளும்வழியாக. வைணவர்களுக்கு இருக்கிறது, எம்பெருமான் திருவடிகளேசரணம் என்ற இரைச்சல். இதுபோலவே, பகுத்தறிவாளர்களின் கேள்விகள்கிளம்புகிறபோதெல்லாம்,கூட்டத்தை முடிக்கக்கூவி விடுவதன்றி வேறொன்றறியாப் பராபரங்களாக இவர்கள் இருப்பரேல், மக்கள் சிந்திக்கத் தொடங்கமாட்டார்களா?

“என்னய்யா இது! ஏன் இந்தச் சகலகலாவல்லபர்கள், மிகச்சாமான்யமான பேர்வழிகள்கேட்கும் சாதாரணகேள்விகளுக்குத் திக்குமுக்காடி திருவருளைநாடி, திக்குநாது தப்பிஓட என்று தேடுகின்றனர், என்று மக்கள்பேசிக்கொள்ளமாட்டார்களா? இதுவும் ஒரு பிழைப்பா? புலமைக்கு இது அழகா? என்றுகேட்க ஆரம்பிக்கமாட்டார்களா? புராணப்புலவர்கள், ஆரஅமர இதனை யோசிக்கவேண்டுகிறேன், ஆலவாயப்பன் இருக்க, அறுமுகன் வேலிருக்க, ஆனைமுகத்தான் இருக்க, அடியேன் அஞ்சுவதும்இல்லை, அஞ்சவருவதும்இல்லை, நாமார்க்குங்குடியல்லோம், என்றுபாடிக்கொண்டே நெடுநாட்களுக்குஇருந்துவிடமுடியாது, என்பதை அவர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும். குடந்தையிலே ஒரு கோயிலிலே கூடினகூட்டத்திலே, குகப்பிரியர் கிருபானந்தவாரியார் சீமந்தனி என்றோர் புராணம் நடத்தினாராம். ஒரு துண்டுக்காகிதம், அவருடையசீமந்தனி காலட்சேபத்திலே சீரழிவு உண்டாக்கிற்றாம். சில கேள்விகள் பொறித்திருந்தனராம் துண்டுக்காகிதத்தில். கூட்டத்திலே குழப்பமாம், உத்தாரம் தருவேன் நான்உறையும் இடம்வாரீர் என்று அழைத்தாராம் பிரசங்கியார், எல்லோரும் கேட்கட்டும் இங்கேயே இயம்புக என்றனராம் சிலர், இல்லை என்றனராம் சிலர். நிறுத்துங்கள் உங்கள்சொல்லை என்றனராம் மற்றவர், அதனால் விளைந்ததாம்தொல்லை, சாக்கியர் கல்கொண்டுசிவனுரைப் பூஜைசெய்த காதையை எந்தப் புராணிகரேகூறக் கேட்டிருந்த யாரோசிலர், வீசினராம் கற்களை, போலீஸ் நுழைந்ததாம், பிறகு சீமந்தனி நடந்ததாம். இப்படியும் காலம்மாற வேண்டுமா, என்று துக்கப்படுவதைவிட மக்களின் மனப்பாங்கு இனிப்புளுகுக்கு இடந்தராது என்பதை உணருவதே உயர்ந்தோர்கடன். இதனைநான்கல்லெண்

ணத்தோடும், நாட்டின்நிலை அறிந்ததாலும் கூறுகிறேன், நிந்தனைக்குஅல்ல. என்னைத் தயவுசெய்து புராணிகர்கள் நம்பவேண்டும். நான் அவர்களின் கடைசி நண்பன்!! உண்மையில்! கோலார் பக்கத்திலே சிலர் "கம்பர்" நாடகமாட முயற்சித்தனராம், ஆங்குள்ள தமிழரின் சீற்றத்தைஅறிந்து அந்த முயற்சியைக் கைவிட்டனராம். பட்டுக்கோட்டையிலே இராமாயணம் படிக்கவந்தவர், ஏட்டைச் சுருட்டிக்கக்கத்திலே வைத்துக்கொண்டு எடுத்தாராம் பெருநடை. காஞ்சியிலே ஓர் மூலையிலே கூடினராம் கம்பதாசர்கள், அங்கும்கேள்விகளாம், கம்பராமாயணக் கருத்துக்கு மறுப்பு உரைப்போர், மேடை ஏறிப்பேசித் தமதுகட்சியைஎடுத்துரைத்தனராம். இவைகளைப்பற்றிக் கவலைப்படாமல், R. P. சேதுப்பிள்ளைகள் சொற்செல்வரைப்பற்றிச் சோர்விலாது பேசுவோம், உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும் என்று உரைக்கக்கூடும்; மீனாட்சிசுந்தரனார்கள் தமது கெம்பீரமான குரலிலே என்ன நேரிட்டாலும் சரியே எடுத்தகாரியத்தை முடித்தே தீருவோம் என்று முழக்கமிடக்கூடும், திரு. வி. கலியாணசுந்தரனார்கள் நான் அஞ்சேன், இதற்கெல்லாம் அஞ்சேன், எதற்குமே அஞ்சேன் என்று கூறக்கூடும். உண்மையிலேயே இவர்கள் வீரர்களாக இருக்கவுங்கூடும். ஆனால் ஒன்றுஉறுதி. இன்று புராணம் நிலைப்பதற்குக் காரணம் இவர்களின் வீரமேயன்றி வேறல்ல என்பதையாவது அவர்கள் உள்ளூர உணர்வார்களல்லவா? இவர்களின் அறிவும் ஆற்றலும், இப்படிப்பிணத்தைக் காவல் புரியும் பணிக்கா பயன்படவேண்டும். நாடு கேட்கிறதே, இவர்களின்தொண்டு வேறு பல நல்லகாரியங்களுக்கு. சமுகத்துரோகிகள் யார் என்ற கேள்விக்கு ஓர்பேரறிவாளர் உரைத்திடுகிறார்," 1. ஆற்றலைப் பயன்படுத்தாதவன். 2. அதைவிடத் துரோகி தனது ஆற்றலைத்தகாத முறையிலே பயன்படுத்துபவன்என்று. இவ்வளவுகற்று, இத்துணைத்திறம்பெற்று, பயனற்ற காரியத்துக்கு மாரடித்திடும் இவர்தம்நிலையை எண்ணினால், துக்கமன்றோ என்போன்றாருக்கு வருகிறது. எவ்வளவு நல்லமனிதர்கள், எத்தகைய பொல்லாக் காரியத்துக்குப் பயன்படுகின்றனர், என்னே இவர்தம்நிலைமை, என்று உண்மையிலேயே உளம்வருந்திஉரைக்கிறேன். இவை சு. ம.வின் காலாடித்தனம் என்ற ஒரே வாசகத்தால், நிலைமையை மறைக்கப்பார்ப்பர் சிலர். இது, பாலைவனத்திலே உலவும்தீப்பறவை, தன்முகத்தை மறைத்துக்கொண்டதும், வேடுவன் விழிக்குத் தெரியாமல் தப்பலாம் என்று தவறாக எண்ணுவதுபோன்றதல்லவா? ஒரு கூட்டத்திலாவது, சு. ம.க்காரர்கள் கொடுத்துள்ள கேள்வித்தாட்கள், காலாடித்தனமாக உள்ளனவா? காலம்கிளப்பிவிடும் சந்தேகங்களைத்தானே அவர்கள் கேட்கின்றனர், "விளக்கம்கூறுவிரிவுரை பயன்உண்டா, உப்பில்லாப் பண்டமல்லவா அது. கல்லாதவர்கள் என்று தூற்றுவதுண்டு, இக்கண்ணியர்கள், சு. ம.க்களைக் கல்லாதவர்கள், இல்லாதவற்றை இயம்பிப்பிழைக்கும் சொல்லாளரிடை விடுக்கும் கேள்விகள், அந்த ஏடாளரின் மனதிலேஇருக்கும் நுண்ணறிவை ஒரு நொடியில் போக்கிடுகிறதே அதன் மர்மம்என்ன? கல்லாதவர்கள் கரம் கொட்டிச் சிரம் அசைத்துக்கிடப்பரேயன்றி, சொல்லுக்குப் பொருள்கேட்பரா? இப்போதும் நான் கேட்கிறேன், இதுவரை எந்தப் புராணிகனாவது, வாதத்தால் தனதுகட்சியை நிலைக்கச்செய்ததுண்டா? முடியாதே! அவ்வளவு புளுகு இருக்கிறதே புராணங்களிலே!

சீமந்தனி கதையைக் கூடத்தான் கவனிப்போமே! அதிலே மக்கள் சீர்படமார்க்கம் என்ன காட்டப்படுகிறது. அதை ஓதுவதாலோ, ஓதிடக்கேட்பதாலோ உறுபயன்யாது? செந்தமிழை அதற்குச் சேர்த்துவிடுவதால், தமிழுக்குத்தானே இழுக்கு. பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறுதல்போல, கவைக்குதவா இக்கதைகள், கனிமொழிபேசும் கிருபானந்தவாரியார் போன்றாரின் திறமையைத் துணைகொண்டல்லவா, நடமாடுகின்றன. பன்றியுடன் சேர்ந்தகன்றெனப், புராணத்தோடு சேர்ந்து தமிழும் தமிழரும், நல்லோரும் நாவலரும் கெடுகின்றனரே, இதல்லவா?

சீமந்தனி என்பவள் சித்திரவர்மன் என்ற அரசனின் புத்ரி. 14ம் வயதிலே இவளுக்குத்தாலி அறுபடும் என்றுசோதிடன் கூறினான். இது தெரிந்த சீமந்தனி சோமவாரவிரதம் அனுஷ்டித்தாள். நிடதேசமன்னன் சந்திராங்கதனை மணம் செய்துகொள்கிறாள். யமுனையிலே ஓடத்திலே சந்திராங்கதன் சில நண்பர்களுடன் செல்கிறான். ஓடம் கவிழ, யாவரும் மாண்டனர்; சந்திராங்கதன் மட்டும் தப்பினான், நாகலோகம் சென்றான், அங்கு நாகராசன் இவனுக்குப் பலபரிசுகள் தந்தனுப்புகிறான். இதற்குள் சந்திராங்கதன் இறந்தான் என்று எண்ணிச் சீமந்தனியை விதவைக்கோலமாக்கி விடுகின்றனர். ஒருநாள் யமுனாநதிதீரத்திலே, சந்திராங்கதன் சோமவார விரதம் அனுஷ்டிக்க வருகிறான், அதேசமயம் சீமந்தனியும்வருகிறாள். தன்மனைவி கைம்மைக் கோலத்திலிருக்கக்கண்டு சந்திராங்கதன் வேறோர் ஆள்போல அவளிடம் பேசுகிறான், ஏன் இக்கோலம் என்று கேட்கிறான். அவள் தன் கணவன் இறந்தானென்பதையும், நிடதேசம் எதிரிகளிடம் சிக்கிவிட்டதென்பதையும், சந்திராங்கதனின் பெற்றோர் சிறைப்பட்டனர் என்பதையும் கூறுகிறாள். சரி, இனி இரண்டுநாளிலே உன் கணவன் வருவான் கவலைப்படாதே என்று சீமந்தனியைத் தேற்றி அனுப்பிவிட்டு, சந்திராங்கதன் நிடதேசம் சென்று, எதிரிகளைத் தோற்கடித்துப் பெற்றோரைச் சிறைமீட்டபின் மீண்டும் சீமந்தனியை மணம்செய்துகொள்கிறான். இதனைகூறுவதன்கருத்துச் சோமவார விரதம் அனுஷ்டிப்பதால் விசேஷபலன் உண்டு, என்று பாமரரை மயக்கத்தான். வறுமையால், பலவாரம் பட்டினிகிடக்கும் பரிதாபத்துக்குரிய மக்கள் ஏராளம் இந்நாட்டிலே. அவர்களின் பசிப்பிணியைப்போக்க, எந்தவிரதமோ வைராக்கியமோ, இதுவரை பயன்தந்ததில்லை. சோமவாரவிரத பலனுக்கு ஒரு கதைகூறி மக்கள் மனதிலே, அதிலே ஒருபிரேமை உண்டாகும்படி செய்வதால், என்ன பயன்? அறிவு வளருமா? ஆண்மை வளருமா? சுகம்பெருகுமா? சொத்துச்சேருமா? சோமவாரவிரதமிருந்ததால்சீமந்தனிக்குத் தாலிஅறுபடவில்லை, ஆகவேதாமும் அந்தவிரதமிருந்து, சுமங்கலியாக வாழலாம் என்று எண்ணிக்கொண்டு, குளித்துமஞ்சள்பூசி, குங்குமப் பொட்டுடன், பூஜைபுரியப் பல்பூவையருக்கு ஆவல் பிறக்கும். அதன்பயனாக ஆலயங்கட்கு வருவாயும், பார்ப்பனர்களுக்குத்தானமும் கிடைக்கும். சோமவாரவிரதத்தின் இலட்சணங்களைக் கூறுபவர்கள், அன்று பார்ப்பனருக்குப் பூசை செய்து, தட்சணைதரவேண்டும் என்பதை எடுத்துக்கூறாமலிருப்பதில்லை. விரதமிருப்பவர்களுக்குப் பலன் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், வேதியர்களுக்குப் பலன் கைமேல்கிடைத்துவிடுகிறது. சோமவார விரதத்தின் அவசியத்தைப் பாமரர் உணருவதற்காகச் சீமந்தனி கதை எழுதப்பட்டிருக்கிறது. தமக்கிருக்கும் செந்தமிழ்த் திறனைக்காட்டக் கிருபானந்தவாரியார் சீமந்தனி கதையைக் காலட்சேபம் செய்கிறார். மக்கள் மனம், கதையின் போக்காலும், பிரசங்கியாரின் வாக்காலும்மயங்கிவிடுகிறது, மக்கள் சோமவாரவிரதமிருக்கத்தொடங்குகிறார்கள், இதனால் ஆரியருக்கு அடிக்கிறது சான்ஸ். அன்று அவர்களின் காலைத் தொட்டுக்கும்பிடுபவர்களும், பாதகாணிக்கை தருபவர்களும், பாடுபட்டுப் பணம் தேடிய பாமரர்கள்தானே! எவனோ ஏட்டிலே ஒரு கதை தீட்டிவிட்டுப்போக, அதை ஒருவர் பாட்டுமொழியிலே பேச, அதைக்கேட்டதன் பலன், பணம், நேரம், நினைப்பு, மானம் என்ற இவைகளைப் பாமரன் இழக்கவும், பார்ப்பனர் கொழுக்கவுமான நிலைமை உண்டாகிறது. அறிந்தோ அறியாமலோ, ஆரியத்துக்குக் கமிஷன் ஏஜண்டுகளாக, இப்பிரசங்கிகள் இருக்கின்றனர் என்பதுவிளங்குகிறதல்லவா? பக்தியின் மேன்மையை விளக்கிடும் கதை, புண்யகதை என்று அவையடக்கம் கூறித்தப்பித்துக்கொள்வர் புராணப்பிரசங்கிகள். இல்லையானால் இந்தக்கதைகளிலே எவ்வளவு முரண்பாடுகள், அசம்பாவிதங்கள், ஆபாசங்கள்! மக்கள் இது சாதாரணக்கதை என்று கருதிவிட்டால், ஒரு விநாடிகூடப்பொறுமையோடு கேட்டுக்கொண்டிருக்கமாட்டார்கள். மக்களின் மதியைத்துலக்கவே, இதுபோன்ற புராணாதிகளிலே உள்ள புரட்டுகளை எடுத்துக்காட்டி மக்கள் மன

6-ம் பக்கம் பார்க்க.

நமப்பார்வதி பதையே.

5ம் பக்கத் தொடர்ச்சி.

திலே, அவைகளிடம் அலட்சியமும் அருவருப்பும் ஏற்படச்செய்யும் பணியைச் சு. ம. இயக்கம் நடத்திவருகிறது. இது தவறு? சோமவார விரதம் அனுஷ்டிக்கத் தெரியாததாலா இன்று நாட்டிலே பலகோடி விதவைகள் உள்ளனர்? புராண இதிகாசங்களிலேயே, பலர் விதவைகளாக இருந்தனரே, அவர்களுக்குத்தெரியாதா, சோமவாரவிரதம்இருந்தால்தாலி இழக்கமாட்டோம் என்பது? சோமவார விரதத்தினால், அறுபட இருக்கும் தாலியைக்கெட்டியாக்கிக்கொள்ளலாம் என்று சீமந்தனி கதை தெரிவிக்கிறதே, இது உண்மையானால். இராமரைப்பெற்றசுமத்திரை சோமவாரவிரதமிருந்து, தசரதனைச் சாகாமலிருக்கும்படியோ, செத்தாலும் மீண்டும் எழுந்து வரும்படியோ, செய்திருப்பார்களே. ஏன்செய்யவில்லை? அந்த அம்மையாருக்குச் சோமவாரவிரத மகிமை தெரியாதா? அல்லது தசரதனை மீண்டும் பெறவேண்டும் என்ற எண்ணம் இல்லையா? குந்திதேவி, பாண்டுவைஇழந்திருக்கவேண்டாமே, சோமவாரவிரதம் அனுஷ்டித்துக் கணவனை இறவா வரம் பெறும்படி பாண்டுவைச் செய்திருக்க முடியுமே? மற்றும் கணவனை இழந்த காரிகைகள் கோடி கோடியல்லவா? அவர்கள் இந்தச் சோமவாரவிரதம் அனுஷ்டிக்கத்தெரியாததாலா, விதவைகளாகி விம்மினர்? சோமவார விரதத்துக்குப் புராணம் கற்பிக்கும் மகிமை உண்மையானது என்றால், "பாரதகண்டத்திலே" கணவனை இழந்த பெண்கள் உடன்கட்டைஏறியிருக்கமாட்டார்களே! சோமவார விரதத்துக்கு மகிமை உண்டு என்று நாம் பறையறைவதிலே நாணயம் இருக்குமானால், இவைகளுக்கெல்லாம் ஓர் சமாதானம், விளக்கம்கூறவேண்டாமா?

"இது மகா அற்புதமான குளிகை. மூன்றேவேளை இதனைப்பாலிலே கலக்கிப் பருகினால்போதும், எப்படிப்பட்ட கடுமையான வயிற்றுவலியும் பறந்தே போகும்" என்றுகூறிக் குளிகைவிற்கிறான் வைத்யன், காலையிலே. அன்று மாலையிலேயே அவன், வயிற்றுவலியால் வேதனைப்பட்டுக் கூவுவது வீதிபூராவும் கேட்கிறது என்றால், குளிகையின் யோக்யதை தெரிந்துவிடவில்லையா? வயிற்றுவலியைப் போக்கும் வல்லமை குளிகைக்கு உண்டென்றால், வைத்யனே தன் வயிற்றுவலிக்கு அக்குளிகையைச் சாப்பிட்டிருப்பானே, வலிஇராதே, வேதனைவராதே! குளிகையின் மகத்துவத்தைப்பற்றி வைத்யன் கூறியதன் காரணம், உண்மையிலேயே குளிகைக்கு அந்தச் சக்தி இருப்பது தெரிந்ததால் அல்ல, குளிகைவிலை போகவேண்டும், இவனுக்கும் வாழ்க்கை நடக்கவேண்டும், அதற்காகக் குளிகைக்குப்புளுகு. அதைப்போலத்தான் இந்தப் புராணிகர்களின் நிலைமையும், சோமவார விரதத்தின்போது, பூஜைக்குரியவர்களென்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள, பார்ப்பனர்களிலே எத்தனைவிதவைகள்! அவர்களுக்குச் சோமவாரவிரதம் அனுஷ்டிக்கத் தெரியாதா?

சோமவார விரத மகிமையின் புரட்டு இருக்கட்டும், கதையின் போக்கைப்பாருங்கள், அறிவோடு அதுபொருந்துகிறதா என்று. சோமவார விரதம் இருந்தும், சந்திராங்கதனை இழந்துவிடுகிறாள் சீமந்தனி. யமுனையில் மூழ்கினவன், நாகலோகம் சென்றானாம்! அதுஎப்படி? யமுனைக்கு அடியிலேதான், நாகலோகம்செல்லும் வழி இருக்கிறதா! நாகலோகம் சென்று நாகராசனால் உபசரிக்கப்படக் கூடியஅளவு சக்தியும் யோக்யதையும் பெற்றிருந்த சந்திராங்கதன் கொஞ்சம் புத்தியையும்உபயோகப்படுத்தியிருந்தால், நம்மைக்காணாது மனைவி தவிப்பாளே, ஆற்றிலேவிழுந்து இறந்துபோனானென்று எண்ணிவிடுவாளே, என்று யோசித்து, நாகராசனைக்கொண்டே சீமந்தனிக்குத், தனதுக்ஷேமலாபத்தைப் பற்றிச்செய்தி அனுப்பியிருக்கலாம், சீமந்தனியும் விதவைக்கோலம் கொள்ளாமலிருந்திருக்கக்கூடுமே, ஏன் அவன் அதுபோலச்செய்யவில்லை. சோமவார விரதத்தின் மகிமையிலே முக்கியமானது, மதியிழப்பதுபோலும்! இப்படி மதியிலிகளைப் பெருக்கத்தானே இக்கதைகள் உதவுகின்றன. இத்தகைய கதைகளைப் பரப்புவது, சமூகத்துரோகமல்லவா? துரோகம்புரிபவர்கள் துளசிமாலை அணிந்திருந்தால் என்ன, உருத்திராக்கம் பூண்டால் என்ன, துரோகம்துரோகந்தானே! செய்திஅனுப்பவேண்டுமென்ற புத்திதான் சந்திராங்கதனுக்கு இல்லாமற்போய்விட்டது, பிறகாவது கதையின் போக்குச்சரியாக இருக்கிறதா? யமுனைக்கு அவன் வருகிறானாம், அங்கு சீமந்தினியைக் காண்கிறானாம் கைம்பெண்ணாக! என்னசெய்வான் அறிவுடைய எவனாக இருப்பினும்? ஓடோடிச் சென்று, "பிரியே! உன்னை நான்காணும் பாக்கியம் பெற்றேனே, நான் இறந்துவிட்டேனென்று நீ விதவைக்கோலம் பூண்டாய்? விடு, துயரை. வா, வீடு போவோம்" என்று கூறுவான். புராணப்பாத்திரம் அங்ஙனம் கூறவில்லை. யாரோ வேற்றான்போல நடிக்கிறானாம். ஏனோ இச்சூது? சோமவாரவிரத மகிமையின் மற்றொருபாகம் சூதுபோலும்!

இன்னும் இதிலுள்ள பொருந்தாக்கூற்றுகள் பலப்பல. இப்படிப்பட்ட புராணங்களைப் படித்துக்கொண்டு பாமரரைக்கெடுக்கவேண்டாம் என்று சு. ம. இயக்கம், இவர்களைக்கேட்டுக்கொள்கிறது. அறிவுக்குப் பொருந்தாத கதைகளை அளப்பவரிடம், சிலபலர், சந்தேகவினாக்களை எழுப்புகிறார்கள். பதில்கூறவக்கு இருந்தால் கூறவேண்டும். இல்லை என்றால் கடையைக்கட்டிக்கொள்ளவேண்டும். இரண்டுமின்றி, கேள்விபிறக்கும் நேரத்திலே, நமப்பார்வதி பதயேநம! என்று கூவுவது, என்னபோக்கு. வீரமுழக்கமா, விவேகவிருத்தமா, விருத்தாப்பிய வெண்பாவா, விசாரச்சிந்தா அச்சஅந்தாதியா, சஞ்சலச்சதகமா, எதிலே சேர்ந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. ஒன்று தெரிகிறது, நெடுநாட்களுக்குப் பகுத்தறிவாளரின் கேள்விகளுக்குப் பதில் உரையாக, நமப்பார்வதி பதயே நமவாக இருக்க முடியாது. நிலைமையைக் கண்டு மக்கள், இப்புராணிகரின் நீண்டநா, சு. ம.வைக்கண்டதும் உலருகிறதே, சு. ம.க்களைக்காணாதநேரத்திலே சண்டப்பிரசண்டர்களாக இருக்கும் இந்தப் புராணிகர்கள், சு. ம.க்காரரின் கேள்விகளின் முன்பு தொண்டைவரண்டு, கண்கள் மருண்டு, கை கால் துவண்டு, சூரம் சுருண்டு, விரண்டுபோய், வியர்த்துநின்று, விசாரத்திலே மூழ்கி, விம்மி, கைலாயவாசா! கருணாவிலாசா!! என்று, கூவிடும்கோலந்தான் என்னே! என்று கூறிக்கைகொட்டிநகைப்பர். இந்தக்கவலநிலைமைபிறகுமுன்னர், புராண ஓலைச்சுவடிகளைக் கொளுத்திவிட்டுப் புது வாழ்க்கைமுறை அமைத்துக்கொள்ளும்படி நான் அவர்களுக்குக் கூறுகிறேன். நாடுவெகுவேகமாக நல்லறிவுபெற்றுவருகிறது, இனிநடவாது, பழயசுலோகங்களை வாணிபம்செய்யும் வாழ்க்கை. ஏதோ, நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன், அவர்கள் இஷ்டம், எனக்கொருநஷ்டமுமில்லை.

ரஷ்யாவில்

8ம் பக்கத்தொடர்ச்சி.

கள் அவனது நன்மைக்காகவே இயங்குவதாலும், சம்பளத்தோடு வருஷமொன்றுக்கு ஓய்வுநாள் அதிகமாகக் கிடைத்துவருவதாலும் ஒவ்வொருவரும் தான் தன் நன்மைக்காகவே வேலைசெய்வதாக மகிழ்ச்சிகொள்கின்றனர். உற்சாகம் பெறுகின்றனர். இதனால் முதியோர் நீண்டநாள் பென்ஷன்பெற்று வருகிறார்கள், தாங்களாகவேமகிழ்ச்சியுடனும் ஏதாவதுவேலைசெய்யவும் முன்வருகிறார்கள்.

ஒரு காங்கிரஸ் தொழிலாளிசொல்வதைப்பாருங்கள்.

"எனக்கு இப்பொழுது வயது 62 ஆனால் எனக்கு வயதானதுபோல்தெரியவில்லை. சோவியத் சர்க்காரோ என்னை முதியவர்கள் ஜாபிதாவில்சேர்த்துமாதம் 327 ரூபிள்ஸ் பென்ஷன்கொடுத்து வருகின்றனர். நான் இன்னும் சுரங்கத்தில் வேலைசெய்துவருகிறேன். 850 முதல் 900 ரூபிள்ஸ்வரை சம்பாதித்து வருகிறேன். சில மாதங்களில் 1000 ரூபிள்ஸ் வரை சமபாதித்திருக்கிறேன். வீடுகட்டிக்கொள்ள 3000 ரூபிள்ஸ் முனிசிபல் பாங்கர் எனக்கு அட்வான்ஸ் கொடுத்தனர். 10 வருஷத்தில் கடன்திருப்பிக் கொடுக்கவேண்டும். இப்பொழுது பெரிய விளக்குகள் உள்ள நல்லவீடு எனக்குச் சொந்தமாகயிருக்கிறது."

சோவியத் சர்க்காரின் 120வது சட்டத்தில் இதுசம்பந்தமானவிளக்கம் இருக்கிறது.

காசிக்குப் போனாலும்!

[S. நாராயணசாமி.]

காசிக்குப்போனாலும் கர்மம் தொலையாது, கைலைக்குபோனாலும், செய்த பாவம் தீராது. ஏன் உண்மையாக கடவுள் உலகில் அவதரித்திருந்தால்தானே நாம்செய்த பாவத்தைத்தீர்ப்பார். வெகு தொலைவிலிருந்து வீணாகப் பொருளைச் செலவுசெய்து,மக்கள்பகுத்தறிவைப்புறக்கணித்து, உடல்நலிந்து ஊனக்கண்ணால் நம்மைக்காண வருகிறார்களே, அவர்களுக்குத்தன்மானவாழ்வைத் தடையில்லாமல்கொடுத்து பகுத்தறிவெனும் பாலை ஊட்டுவார். மக்கள் மானத்தை பறிகொடுத்து மடமையில் உழலுவதைநீக்கி, பொய்ப்புரட்டுக்காரர்களிடம் புகாமல், தன்மானத்தோடு வாழுங்கள் என்று போதிப்பார். தவிர காணவரும்மக்களைக் கண்டு கண்ணியர்களே! என்னைக்கடைவீதியில் பலகூறாக்கி-ஒவ்வொரு கூறுக்கும்-ஓர் பெயர்கொடுத்து ஓங்காரகூச்சலிட்டு, உங்களைஏமாற்றி, உங்கள்காசைப் பறித்து, உங்கள் வாழ்வை நலியவைக்கும் நாசக்காரர்களை நம்பாதீர்கள் என்று நவிலுவார். இப்படிச்சொல்லும் கடவுள் அப்பொழுதும் இருந்ததில்லை, இனிமேலும்உதிக்கப்போவதில்லைஎல்லாம்நம்மை அடிமைத்தனக்கு ஆளாக்கின ஆரியமதக்காரர்கள் லீலைதான். அன்பர்களே, கோயிலிலே சென்றுப் பாருங்கள். உள்ளே இருப்பது நமது இந்தியாவிலே இருக்கப்பட்ட வார்ப்படச்சாலைகளிலே உருக்கி வார்க்கப்பட்ட வனப்புமிக்க வார்ப்படச்சாமிகள்தான், செய்தவர்கள் செந்தமிழர்கள், அதன் பலனை அனுபவிப்பவர்கள் ஆரியர்கள். என்னகொடுமை இது. மரம் வைத்து வளர்ப்பவன் ஒருவன், அதில் காய்த்துப்பழுக்கும் பழங்களைத் தின்று பலன் அனுபவிப்பவன் ஒருவனோ? இதைக் கேட்பார் இல்லையா? தமிழர்களே! ஆயிரம் பத்தாயிரமாகப் பணத்தைப் பாழ்படுத்தி பார்ப்பனர்களால் ஆக்கப்பட்ட சாமிகளுக்குச் செலவிடும் தனவான்களே! சற்றுயோசித்துப்பாருங்கள். பத்தாயிரம் ரூபாய் அச்சாமிகளுக்குச் செலவிட்டாலும், அப்பார்ப்பனச்சாமியைப் பகிரங்கமாகத்தொட உரிமையிருக்கிறதா?உங்கள் உடலில்என்னநாற்ற மடிக்கிறதா உன்னை அச்சாமிதொடாதேஎன்று சொல்கிறாரா? அல்லது உங்கள் உடலில் இருக்கப்பட்ட உதிரம், பார்ப்பனர்களுக்குத்தாழ்ந்ததா? பிறப்பில் வேற்றுமை உண்டா? பிறக்கும்போது, பிராமணன், சூத்திரன்,வைசியன் என்ற வர்ணச்சீட்டுகள் வாங்கிவருகிறார்களா? என்ன அக்ரமம்! நம் தமிழரை ஏமாற்ற எவ்வளவு சூழ்ச்சிகள். காசிக்கும் கைலைக்கும் போவதைவிட கண்டதை எல்லாம் கடவுளாகக் கொண்டாடச் செய்யும்பார்ப்பனர்களுக்குப் பச்சரிசி, பருப்பு, நெய் முதற்கொண்டு படுக்க பாய்வரைக்கும்கொடுத்தால் பண்ணியகொடிய பாவமெல்லாம் பறந்து போய்விடுமாம், பாருங்கள், அவர்கள் மாயையை. தமிழர்களை ஏமாற்றும் தந்திரங்கள். இதை அறியாமல் நம்தமிழர்கள் கோயிலைக்கட்டுவதும், குளத்தைவெட்டுவதும், மண்டபங்களை மாற்றி அமைப்பதும், வாகனங்களை வர்ணமிட்டுப் புதுப்பிப்பதும், வைரதங்க நகைகளைச்செய்து உயிரற்ற உருவத்திற்குப்போட்டு உள்ளம் களிப்பதும், மானியங்களை மடத்தனமாகக் கோயிலுக்கு வாரியிறைப்பதும், ஆறுகாலபூஜை, எட்டுகால பூஜை, என்று ஏராளமானபொருளைச்செலவிட்டுஅலுத்துப்போகிறார்களே தவிர பலன் ஒன்றும் கண்டபாடில்லை. ஆதியில் தமிழர்களுக்கு சூட்டிய ஆரியப்பாமாலையான 'சூத்திரன்' என்றகுறையும் நீங்கினபாடில்லை பக்தியில் மூழ்கிபகுத்தறிவைப் பாழ்படுத்திக்கொள்ளும் பக்தர்கள் மேற்சொன்னவைகளை நன்றாய் ஆராய்ந்து பார்க்க வேண்டுகிறேன்.

குறிப்பாக, ரஷிய நாட்டைப் பாருங்கள். கொடுங்கோல் ஆட்சிசெய்து, மக்கள் கருத்தை மங்கவைத்து, அடிமைகொண்டு அரசாண்ட ஜார்மன்னன் சாய்ந்தான், சமதர்மம் மலர்ந்து மக்களிடையே மணத்தைவீசி, மங்கிப்போன பகுத்தறிவை மறுபடியும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கச்செய்தது. மக்கள் தன்மானத்தோடு வாழ்கிறார்கள். பஞ்சம், பட்டினி புராணம், காவியம், என்ற காளான்கள் அங்குமுளைப்பதில்லை. மக்கள் எல்லோரும் ஓர்குலம். உயர்வுதாழ்வு அங்கு உலாவுவதில்லை. வீரவாழ்வு வாழ்கிறார்கள், வீணர்களை வளர்ப்பதில்லை. நம் நாட்டிலோ, பார்ப்பனர்கள் வாழ்விற்கும் தமிழர்கள் வாழ்விற்கும் எவ்வளவு உயர்வு தாழ்வு இருக்கிறது என்று பாருங்கள். ஏன்? மூடபக்தியில் மூழ்கி, புராணம்என்னும் புயலில்சிக்கி, கரைதெரியாமல் கலங்கும் நம்தமிழர்கள் எப்படிமீட்சியடைந்து ரஷிய நாட்டைப்போல் வாழமுடியும்? காலையில் எழுந்ததும் கடன்களை முடித்துக்கொண்டு, கடையில் விற்கும் சாம்பலை முகத்தில் பூசி, மூடமதிகொண்டு, முன்னேநிற்கும் கல்லைப்பார்த்து.

சித்தம் இறங்கவில்லையா
என் அய்யனே......

என்று நெஞ்சுலர்ந்து, நாவரண்டு, மூச்சுத்திணர, ஜீவன்போகும்படி பாடும், ஜீவசிந்தாமணிகள் இருக்கும் வரையில் நம் தமிழ்நாடு விடுதலைபெற முடியாது.

முற்காலத்தில் இருந்த சைவபக்தமெய்யன்பரான ஞானசம்பந்தர் பார்வதி அம்மையாரின் பாலையே பருகினாராம், கடவுளின் பாலையுண்ட கண்ணியரான பார்ப்பன ஞானசம்பந்தர் பண்ணின்அக்ரமம்சொல்ல அளவேயில்லை. அன்பே சிவம், ஜீவகாருண்யமே தனது திறவுகோல் என்று திருட்டுவேடமிட்டு, யாகங்களில் அளவுகடந்த, ஆண்டவனால்படைக்கப்பட்ட ஆடுகளை அறுத்துபோட்டு யாகங்களை நிறைவேற்றினாராம். அதை அறிந்த சமணர்கள் யாகங்களில் ஆடுகளை அறுப்பது ஜீவகாருண்யமல்ல இது தீச்செயலாகும் என்று தடுத்துபேச, 8000 சமணர்களைக்கழுவிலேற்றி கண்டுகளித்தாராம். என்னேஅவரது ஜீவகாருண்யம்! பார்வதியின்பாலையுண்ட பக்தருக்கு எவ்வளவு பண்புபாருங்கள்.

பகுத்தறிவாளர்களே மதுரைசென்று பாருங்கள்! மதுரையை மனுநீதி தவறாமல் ஆண்டமாபெரு அரசரான திருமலை நாயக்கர் மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலே தொந்திசரிந்த உருவமாகச்செய்து அவருக்கு வர்ணத்தினால், தென்னைமரத்துக்கு தார்அடிப்பதுபோல் அவர் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் வர்ணத்தைப்பூசி, அவருக்கு ஓர்விதஅலங்காரமும் இல்லாமல், அவர் இன்னவர் என்று எடுத்துரைக்க எவரும் அருகில் இல்லாமல் இரும்புக்கம்பிகள் இட்டகதவுகளால் சாத்திப்பூட்டிச் சிறையில்கைதிகளை அடைப்பது போல் அடைத்து வைத்து இருக்கிறார்கள். பாருங்கள் பகவானுக்கு பணிவிடை செய்துவந்த பக்தஅரசனை, கேவலம் ஓர்காவல்காரனைப்போல்செய்த கோலத்தை. ஆரியசாமிகள் அதிஉல்லாசமாக விளங்கவேண்டுமாம். தமிழர்களே இதைப்பார்த்து உங்கள் இரத்தம் கொதிக்கவில்லையா! கண்களில் தீப்பொறி பறக்கவில்லையா? பண்டைவீரம் எங்கே! பணியாமல் வாழ்ந்த பண்டைய வாழ்வெங்கே போயிற்று? வீரமுடன் ஆண்ட வீரமன்னர்களின் தீரச் செயல்களை கோயில் மதில்களிலே தீட்டி அவர்கள் புகழை ஓங்கச்செய்துஅவர்களைப்போல் வாழத் தமிழர்கள் முன்வர வேண்டும். என்பதை எடுத்துக்காட்டாமல் கைலாய நாதர்வந்தார் காட்டில் பாம்பைக் கொன்றார்—கரியைப் பரிகளாக்கினார், வைகையை வரவழைத்தார், வாள்கொண்டு போர்புரிந்தார் என்றவஞ்சககபட ஆரிய புராணக்கட்டுக்கதைகளை கலர்வர்ணமிட்டு களங்கமில்லாத நம்மை விலங்கினங்களுக்கீடாகச்செய்து அக்காதைகளைக்கண்டு கன்னத்தில்அடித்துக்கொள்ளும் கபோதிகளாக நம்தமிழர்களை ஆரியர்கள் ஆட்டிப்படைத்தார்கள். வீரத்தமிழர்களே! நமக்குஞானமில்லையா ஆண்மையில்லையா, அறிவெனும் தீப்பொறி இல்லையா, இவ்வளவு இருந்தும் நாம் இன்

(8ம் பக்கம் பார்க்க.)

காசிக்குப்போனலும்!

7ம் பக்கத் தொடர்ச்சி.

னுமா அச்சேற்றில் புரளவேண்டும். பாருங்கள் நமது காமகோடிபீடாதிபதியானஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியாரை ரஷிய நகருக்கு அனுப்பி வீரஸ்டாலினைக்கண்டு எமதுகடவுள் மாதம் மூன்று முறைமழை பொழியச்செய்கிருர் ஆலகாலவிஷத்தை அமுதென உண்டவர் கொடிய அரவங்களை உடலில் தரித்தவர் முப்புரத்தையும் நெற்றிக்கண்ணலே பார்த்தமாத்திரத்தில் எரித்தவர் தவிற எமது ஆதிகால சங்கராச்சாரியானவர் பிடாரியாகிய சக்தியை பாதாளத்தில் ஆழ்த்தினவர் பாருங்கள் எமது புராணங்களை என்று அவரிடம் எடுத்துரைத்தால் வீரஸ்டாலின் என்ன சோல்வார் என்பதைநான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!

ஆரியர்காலத்திலே அளவிலா அவதாரங்கள்செய்த அச்சிவபெருமான், இந்த கோரயுத்தத்திலே மக்கள் எண்ணற்ற கோடித்தொகையில் மடிகிருர்களே,பிரிட்டிஷார் நமது நகரத்தை எதிரிகள் பாழ்படுத்தாமலிருக்க சிரமப்பட்டு பாதுகாக்கிருர்களே! பட்டினியால் மக்கள் பரிதாபகரமான வாழ்வில் நலிகிருர்களே! நமது பக்தர்கள் இவ்வாறு நலிவதை நாம் பார்த்திருப்பதா என்று அக்கஷ்டங்களைத்தீர்க்க ஓர் அவதாரம் என் எடுக்கக்கூடாது? அக்காலத்தில் எடுத்திருந்தால் தானே இக்காலத்தில் எடுக்கமுடியும்? தமிழர்களே நன்ருய்ச் சிந்தித்துப்பாருங்கள்! ஜீவன்உள்ளவரையில் நாம், எத்தனை கோயில்கட்டினுலும், குளத்தை வெட்டினுல். பொன் பொருளைப்போக்கடித்துக் கொண்டாலும் அச்சிவபெருமான் நமக்கு சேவைத்தரப்போவதில்லை. நம்மை ஈனவாழ்வில்தள்ளி இன்னல்களுக்கு ஆளாக்கிநம்பொருளைச் சுரண்டி பார்ப்பனர்களைப் பச்சென்றிருக்கச் செய்வாரே ஒழிய நம்மை முன்னுக்கு கொண்டுவர அவருக்கு மனமிராது. தமிழர்களே! மூடநம்பிக்கையை முறியடியுங்கள்! புதுத்துறையில்வாழ்வைச்செலுத்துங்கள், அதில் பகுத்தறிவுமலர்களைப்பூக்கச்செய்யுங்கள்! மோட்சம்—நரகம்-என்றகண்மூடிக்கொள்கைகளை மண்மூடிப்போகும்படிச் செய்யுங்கள். புராணம், இதிகாசம், காவியம் முதலிய கள்ளிகளை நம் தமிழ் பூங்காவில் தஞ்சம் செய்யாதீர்கள் மதஆசாரியர்களுக்கு மண்டிஇடாதீர்கள்-கோயில், கும்பாபிஷேகம் என்ற கொடிகளைக் களைந்தெரியுங்கள். தமிழகத்தில் சுயமரியாதைச் சுடர்விளக்கை பிரகாசிக்கச் செய்யுங்கள்.

ரஷ்யாவில் முதியோர்கள்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபிள்ஸ் செலவு செய்திருக்கின்றன. 157 லட்சம்ரூபிள்ஸ் சானட்டோரியத்திற்காகவும் நோயாளிகளின் சிகிச்சைக்காகவும் செலவு செய்யப்பட்டிருக்கிறது, தங்களுடைய மெம்பர்களின் குழந்தைகளின் நலனுக்காக 100 லட்சம் ரூபிள்ஸ் செலவு செய்திருக்கின்றன.

சோவியத் யூனியனில் தொழிற்சாலைகளில் உத்தியோகங்களில் இருந்து வருகிறவர்களுக்கு மட்டுமல்ல, சாதாரண குடியானவர்களுக்கும் கிராமாந்திர மக்களுக்கும் வயதான காலத்தில் இத்தகைய சௌகரியங்கள் எல்லாம் அளிக்கப்பட்டு வருகின்றன.

புரட்சிக்கு முன் ஒரு சாதாரணகுடியானவன் மிக்க கஷ்ட வாழ்க்கையில் இருந்து வந்தான். அதிலும் வயதானவர்கள் நிலை மிகமோசமாயிருந்தது. அந்நாளில் வயதானவர், ஒரு குடும்பத்தின் பெரும்பீடை, பாரம் என்க் கருதப்பட்டது. கிழட்டுப்பிணம் என்று ஒழியும் எனக்கருதப்பட்டு வந்தது. உதாரணமாக ஒரு பழமொழி கூடவழங்கி வந்தது ரஷ்யாவில். அதாவது, "முதிர்வயது ஒரு பிளேக்" என்று வழங்கப்பட்டு வந்தது ஆனல் இன்று அப்பழமொழி காதிலே கேட்க முடியாது.

கூட்டுப்பண்ணைமுறை குடியானவர்களின் வாழ்க்கை முறையையே மாற்றியமைத்து விட்டது. அந்நாளில் வயது சென்ற குடியானவர்கள் வீடில்லாமல் ஊரூராய்ப் பிச்சையெடுத்துத் திரி தார்கள்.

இன்ருே, கூட்டுப்பண்ணையின் வேலை வாகமுதியவர்களுக்குச் சமூகம்பாதுகா பளிக்கிறது.

வேலை செய்யும் நேரக்குறைவாலும் அவனது பாதுகாப்புக்காக ஏராளமா செலவு செய்யப்படுவதாலும், இயந்திர

(6ம் பக்கம் பார்க்க)

கரூர்,

அம்பிகா டாக்கீசில்

உயர்திரு.

புலியூர் கந்தசாமி அவர்கள் தலைமையில்

15—5—44ல்

★ சந்திரோதயம் ★

நடைபெறும்.

டிக்கட் ரூபா:—5, 3, 2, 1.

தாய்மார்களுக்குமட்டும் 0—8—0 டிக்கட் உண்டு.

வெளியூர் அன்பர்கட்கு, முதல்வகுப்பு டிக்கட்மட்டும் 13ந் தேதிவரை, முன் பணம் அனுப்பினுல் ரிசர்வ் செய்யப்படும்.

இனங்கனூர், K. சுப்பையா, உதவிநிதித் தலைவர்.

விவரங்கட்கு,

சண்முகம்,

தமிழர் உணவு விடுதி, கரூர்.

என்ற முகவரிக்கு எழுதவும்.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.